உயர்நிலைக் குழு பரிந்துரைகள் – கிராம சபை கூட்டம் – கிராம சபை கூட்ட செலவின வரம்பினை உயர்த்துதல்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை

அரசாணை (நிலை) எண். 160 நாள் : 30.9.2008

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.245, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 19.11.1998.
2. அரசாணை (நிலை) எண்.76, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 26.3.2000.
3. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, கடிதம் எண்.ந.க.58584/08/ப.ரா.அ.2.2, நாள் 2.9.2000

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் கிராம சபை ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15 மற்றும் அக்டோபர் 2 தேதிகளில் நடத்தப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டது. கிராம சபையினை நடத்த, கிராம ஊராட்சியின் அனுமதியின்படி, கிராம ஊராட்சி நிதியிலிருந்து, அதிகபட்சமாக ரூ.500/– செலவு செய்ய கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் ஆணையிடப்பட்டது.

2. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான மூன்றாவது உயர்நிலைக் குழு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், கிராம சபை நடத்துவதற்கான செலவினத்தை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்துவது என பரிந்துரைத்துள்ளது.

3. அதன் பொருட்டு, கிராம ஊராட்சி நிதியிலிருந்து கிராம சபை நடத்த 26.3.2000–ம் நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறை, அரசாணை எண்.76–ன்படி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.500/– என்பது போதுமானதாக இல்லை என்றும், எனவே உயர்நிலைக்குழுவின் பரிந்துரையின்படி கிராம சபை நடத்துவதற்கான செலவினத்தின் வரம்பினை ரூ.1,000/– ஆக உயர்த்தலாம் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரைத்துள்ளார். மேலும் இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்தை கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்றும், இதனால் அரசுக்கு எந்தவித கூடுதல் நிதிச் சுமையும் ஏற்படாது என்றும் எனவே, இதன் பொருட்டு அரசாணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன் அடிப்படையில் கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கான செலவினங்களை ஊராட்சி மன்ற ஒப்புதலுடன் அதிகபட்சமாக ரூ. 1,000/–மட்டும் (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 57584/ஊ.வ/08 நாள் 22.9.2008–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.